**<u>2025 செப்டம்பர் மாதம் 11– ஆம் தேதி வியாழக்கிழமை</u>**

**<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>**

**<u>எம் .சி .ஓ .பி. நெம்பர் : 73/2019</u>**

MCOP No.: 73/2019 – ராஜாராம் PW1 11.09.2025

த/பெ.குருசாமி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, 4ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும், ம.சா.ஆ.1 ஆவணத்திலும் எனது மனைவி சாலையை கடக்க முற்படும்போது விபத்து நடைபெற்றது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவி சாலையை கடக்கும்போது இருபுறமும் கவனிக்காமல் திடீரென்று சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மனைவி மீது மோதிய காரை ஓட்டிய நபர் மெதுவாகவும், கவனமாகவும், சாலை விதிகளை கடைப்பிடித்தும் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. எனது மனுவில் எனது மனைவி விபத்து சமயத்தில் விசைத்தறியில் கூலி வேலை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 4வது பக்கத்தில் எனது மனைவி விபத்து சமயத்தில் கூலி வேலை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவி விசைத்தறியில் வேலை பார்ப்பதாக சொல்லியுள்ளதில் அவருக்கு யார் சம்பளம் கொடுப்பார்கள் என்று மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.5 பிரேத பரிசோதனை அறிக்கையில் எனது மனைவியின் வயது 46 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் இறக்கும் சமயத்தில் எனது மனைவிக்கு வயது 38

என தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதிகப்படியான இழப்பீடு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் விபத்து சமயத்தில் இறந்த எனது மனைவிக்கு வயது 38 என தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுவில் 5ம் எதிர்மனுதாரர் எனது மகள் என்றால் சரிதான். நானும் மற்ற மனுதாரர்களும், 5ம் எதிர்மனுதாரரும் இறந்துபோன எனது மனைவியின் வருமானத்தை நம்பி இருக்கவில்லை என்றால் சரியல்ல. நானும் மற்ற மனுதாரர்களும், 5ம் எதிர்மனுதாரரும் விபத்து சமயத்தில் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தோம் என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காப்பீட்டு நிபந்தனையின்படி 2ம் எதிர்மனுதாரர் அவருடைய வாகனத்தை 3ம் எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்த விபரத்தை காப்பீட்டு நிறுவனத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும், அவ்வாறு தெரிவிக்காத செயல் காப்பீட்டு நிபந்தனைகளை மீறிய செயலாகும் என்றும், காப்பீட்டு விதிமீறல் இருப்பதால் 4ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் காரை ஓட்டிவந்த நபர் எனது மனைவி தீடீரென குறுக்கே வந்ததை பார்த்து காரை Sudden Brake போட்டு நிறுத்திவிட்டார் என்றும், எனது மனைவியின் கவனக்குறைவால் தான் கார் மீது இடித்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது மனைவியின் கவனக்குறைவு தான் இந்த விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. எனது மனைவி விபத்து சமயத்தில் என்ன தொழில் செய்து வந்தார் என்ற விபரத்தை முன்னுக்குப் பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றும், உண்மையில் எனது மனைவி வேலைக்கு எதுவும் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில்

எனது மனைவி மாதம் ரூ.20,000/— வருமானம் ஈட்டி வந்தார் என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் அதிகப்படியான இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 11.09.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.11 17:40:37 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி(FAC). தேனி.
11.09.2025